செய்தி குறிப்பு எண்–78 நாள்–16.8.2008

# அரசு செய்தி வெளியீடு

# உயர்கல்வித் துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி அறிக்கை

**புதிய மருத்துவக் கல்லூரிகள் துவங்க மாநில அரசிடமிருந்து இன்றியமையாச் சான்றிதழ் (**Essentiality Certificate) **பெற்றாலும் இந்த மருத்துவக் கல்லூரிகளின் இடங்களின் எண்ணிக்கையை இந்திய மருத்துவக் கவுன்சில் பரிந்துரையின் பேரில் மத்திய சுகாதாரத் துறை நிர்ணயம் செய்து அனுமதி அளிக்கிறது. மாநில அரசிடமிருந்து இன்றியமையாச் சான்றிதழ் அல்லது பரிந்துரை பெறாமலேயே தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு நிகர்நிலைப் பல்கலைக் கழக அந்தஸ்தினை மைய அரசு வழங்கி விடுகிறது. சமீபத்தில் செட்டிநாடு மருத்துவக் கல்லூரிக்கு மாநில அரசின் பரிந்துரை ஏதுமில்லாமல் நிகர்நிலைப் பல்கலைக் கழக அந்தஸ்து மைய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை வழங்கியுள்ளது. இதனால், மாநில அரசின் ஒதுக்கீட்டிற்கு வர வேண்டிய 83 மருத்துவ இடங்கள் கிடைக்காமல் போய்விட்டது. இது சம்பந்தமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரமும், மாணவர்களின் சேர்க்கை, அவர்கள் செலுத்த வேண்டிய கட்டணம் மற்றும் கல்வியின் தரம் ஆகியவற்றை உறுதி செய்ய மாநில அரசுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி மைய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்கள்.**

**பொறியியல் கல்விக்கான மாணவர் சேர்க்கையைப் பொறுத்த வரையில், 14.8.2008 மாலையுடன் முடிவடைந்த இரண்டாம் கட்ட கலந்தாய்வில் இதுவரை**

5880 தாழ்த்தப்பட்ட பிரிவு மாணவர்களுக்கும், 120 பழங்குடியின மாணவர்களுக்கும் அரசு ஒதுக்கீட்டில் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 14.8.2008 அன்று காலியாக உள்ள தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கான அரசு ஒதுக்கீட்டுப் பொறியியல் கல்லூரி இடங்கள் 8868. மூன்றாம் கட்ட கலந்தாய்விற்கு விண்ணப்பம் செய்துள்ள மீதமுள்ள 8189 தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளனர். ஆகையினால், விண்ணப்பம் செய்துள்ள அத்தனை தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும் முழுமையாக இடம் கிடைக்க வாய்ப்புள்ளது. அதே போல, 14.8.2008 அன்று காலியாக உள்ள 674 பழங்குடியின மாணவர்களுக்கான இடங்களுக்கு 202 பழங்குடியின விண்ணப்பதாரர்கள் அழைக்கப்பட்டு அவர்கள் அனைவருக்கும் முழுமையாக இடம் கிடைக்க வாய்ப்புள்ளது. 2005–2006ல் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்கள் 4813 பேர் பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்துள்ளனர். கடந்த ஆண்டு அதாவது, 2007–2008ல் 8383 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்கள் சேர்ந்துள்ளனர். இது மிகப் பெரிய வளர்ச்சி என்பதை யாராலும் மறுக்க முடியாது.

2005–2006ல் இருந்து 2008–2009 வரை ஒவ்வொரு ஆண்டும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்கள் பொறியியல் படிப்பில் சேர்வது அதிகரித்துள்ளது என்று நான் எனது அறிக்கையில் தெரிவித்திருந்தேன். இதில் என்ன மாறுபாடு இருக்க முடியும். அதே போல, கல்லூரிகளின் எண்ணிக்கையை உயர்கல்வித் துறை அமைச்சர் சொல்ல வில்லை என்றும் சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு ஆண்டும் எத்தனை பொறியியல் கல்லூரிகள் புதிதாகத் தொடங்கப்படுகின்றன என்பது செய்தித் தாள்களில் விரிவாக செய்திகளாக வெளி வந்துள்ள நிலையில் இதில் மறைப்பதற்கு என்ன இருக்கிறது ? 2005–2006 ஆண்டில் 236 சுயநிதிப்

**பொறியியல் கல்லூரிகள் இருந்தன. 2008–2009ல் 344 சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளாக அதிகரித்துள்ளன. சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு மாநில அரசின் தடையின்மைச் சான்று தேவையில்லை என்று 2006லேயே சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதே சமயத்தில் அதிக எண்ணிக்கையில் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் வந்துள்ளதனால்தான் ஒரு லட்சத்திற்கும் அதிகமாக மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளில் படிப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.**

**மேலும், 2005–2006 வரை அரசு, அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகக் கல்லூரிகள் 14 ஆக இருந்தன. இன்றைக்கு அது 20 ஆக உயர்ந்துள்ளது. இதன் மூலமாக அதிக அளவில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினப் பிரிவு மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளில் சேர்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.**

*******

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.